## கொழும்பில் 1967 அக்டோபர் 7ம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெற்றஇலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபைக் கூட்ட அறிக்கையின் சுருக்கம்.

பங்குபற்றியவர்கள்

திரு எப். அமரசூரியா (தலைவர்), திருவாளர்கள் தி. சி. ஏ. டி சொய்சா, ஏ. பி. பின்சர், டி. இ. ஹெற்றியாராச்சி, ஜி. டி. லோஸ், ஜி. பி. மிடில்டன், எஸ். பத்மநாதன், ஜே. எல். டி. பீரிஸ், எஸ். பி. வைத்திலிங்கம், பி. வருசவிதாரன, கலாநிதி இ. எம். செனறி (அதிபர், தே. ஆ.நி.), திரு ஏ. சி. பெரேரா (செயலாளர்).

பின்வருவோரும் பங்குபற்றினர்கள்

கலாநிதி எல். எச். பெர்ணாண்டோ (உதவி அதிபர், தே.ஆ.நி.), திரு எச். எஸ். குணவர்த்தன (கணக்காளர், தே.ஆ.நி.), திரு ஜி. ஏ. எஸ். குணசிங்க (அதிபரின் செயலாளர், தே.ஆ.நி.).

திருவாளர்கள் சி. பி. சண்முகம், பி. ஜே. சி. டறண்ட், தி. ஏ. மோய், எம். எஸ். பெரேரா, ஏ. ஜி. சாப் பவுல் ஆகியோர் தாம் பங்குபற்றவியலாமையை அறிவித்திருந்தனர்.

1. 1967 மார்ச் 23, 1967 யூலை 30 ஆகிய திகதிகளில் நடைபெற்ற சபைக் கூட்டங்களின் அறிக்கை

(அ) 23.3.67 அன்று நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை.

திரு டி. இ. ஹெற்றியாராச்சி முன்மொழிய திரு எஸ். பத்மநாதன் வழிமொழிய இவ்வறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

(ஆ) 30.7.67 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தின் அறிக்கை

திரு ஜி. பி. மிடில்டன் முன்மொழிய திரு எஸ். பத்மநாதன் வழிமொழிய திருத்தப்பட்ட அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

2. அறிக்கை சம்பந்தமான விடயங்கள்

தேயிலை ஆணைக்குழு

சபை சமர்ப்பித்த நிருபம் சம்பந்தமாக தேயிலை ஆணைக்குழுவிற்கு 1967 செப்டெம்பர் 7ம் திகதியன்று சபைக்குழுவொன்று சாட்சியமளித்துள்ளதென தலைவர் அறிவித்தார்.

3. சபையினதும் குழுக்களினதும் உறுப்புரிமை

(i) சபை

(அ) திரு டி. பி. எல்லப்பொலவிற்குப் பதிலாக திரு தி. சி. ஏ. டி. சொய்சா, தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம், 1967 மார்ச் 29ம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) திரு எம். இராஜேந்திரம், எம். பீ. இ., கௌரவ விவசாய, உணவு அமைச்சரால் சிறுகாணிச் சொந்தக்காரரின் பிரதிநிதியாக 1967 யூலை 23ம் திகதி தொடக்கம் மீண்டும் மூன்று வருடகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ) திரு டி. சி. எல். அமரசிங்காவிற்குப் பதிலாக திரு எம். எஸ். பெரேரா, கமத்தொழில் அதிபர், 1967 மார்ச் 30ம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஈ) திரு டி. ஏ. நீல் 1968 பெப்பிரவரி வரை லீவில் செல்வதால் 1967 செம்டெம்பர் 6ம் திகதி தொடக்கம் ராஜினுமாச் செய்துள்ளார். இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவத்திலிருந்து திரு நீலிற்குப் பதிலாக வேறெருருவரும் நியமிக்கப்படவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

(ii) <u>நிர்வாகக் குழு</u>

(அ) திரு டீ. பி. எல்லப்பொலவிற்குப் பதிலாக திரு தி. சி. ஏ. டி சொய்சா 1967 மார்ச் 29ம் திகதி தொடக்கம் நியமிக்கப் பட்டுள்ளார்.

4. <u>1967 ஏப்பிரல் 25, 1967 ஆகஸ்ட் 10, 1967 செப்டெம்பர் 20 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தின் அறிக்கை.</u>

(அ) <u>1967 ஏப்பிரல் 25ம் திகதி நடைபெற்ற கூட்டம் 1965ம் ஆண்டுக்கான கணக்குப்பரிசோதகர்களின் அறிக்கையும் கணக்குகளும்.</u>

பரிசோதிக்கப்பட்ட கணக்குகளை அங்கத்தவர்களுக்கு அனுப்பி அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(ஆ) <u>நிலையத்தின் நிதி நிலைமைபற்றி தேயிலை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த நிருபம்</u>

நிதி உபசெயற்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கென நகல் நிருபமொன்றை அனுப்பிவைக்குமாறு செயலாளர் வேண்டப்பட்டுள்ளார்.

(இ) <u>தேயிலை ஆணைக்குழுவினரின் சென்ற் கூம்ஸ் விஜயம்.</u>

தேயிலை ஆணைக்குழுவினரின் சென்ற் கூம்ஸ் விஜயத்தின் போது சபை உறுப்பினர்களும் சமூகம் தரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) <u>அக்கிரத்தன்னை உபநிலையம்</u>

திருவாளர்கள் ஜோர்ஜ் ஸ்டுவாட் அன் கம்பனி லிமிட்டட்டில் கடமையாற்றும் திரு உவிற்ருலுடன் அக்கிரத்தன்னைத் தோட்டக் கொள்வனவை கைவிடுவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளாரென அதிபர் கூறினுர். ஊவா தோட்டத் துரைமார்கள் சங்கத்தின் தலைவரிடமிருந்தும் 1967 செப்டெம்பர் 27 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தை அதிபர் பெற்றுள்ளார். இதில், இத்திட்டத்தை கைவிடாது மேற்கொள்ளுவதற்கு வேறுவழிகளில் நிதி திரட்டலாமெனக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊவா தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் தலைவர் அக்கிரத்தன்னை தோட்டத்தை யூரி குரூப் முகவர்களிடமிருந்து குத்தகைக்குப் பெறலாமென ஆலோசனை கூறியுள்ளார். இவ்விடயத்தை விவாதித்ததன் பின்னர் ஊவாத் தோட்டங்களின் நலனைக் கருதி அக்கிரத்தன்னையில் முளைவகைப் பரிசோதனைகளை நடத்துவதென சபை தீர்மானித்தது. அக்கிரத்தன்னையில் 50 ஏக்கர் தோட்டத்தை ஏற்கனவே சம்மதித்த விலைக்குக் கொள்வனவு செய்வதெனத் தீர்மானிக்கப்

பட்டது. (அதாவது, ஒரு ஏக்கர் ரூ 1500/– ஆக 32 ஏக்கர் தேயிலைக் காணி; ஒரு ஏக்கர் ரூ 400/– ஆக 6ஏ—0றூ—02பே பிலாமரங்களுள்ள காணி; ஒரு ஏக்கர் ரூ 250/– ஆக 12 ஏக்கர் பத்தனை). இதன் கொள் விலை ஐந்து ஆண்டுத் தவணைகளாகச் செலுத்தப்படும்; மிகுதியாக இருக்கும் நிலத்தை கொள்வனவு செய்யும் உரிமை பற்றிய உடன் படிக்கை தீர்மானிக்கப்பட விருக்கிறது. இந்நிபந்தனைகளுக்குட்பட யூரி குருப் முகவர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அதிபர் வேண்டப் பட்டுள்ளார். இத்தீர்மானங்களுக்கமைய திரு தி. சி. ஏ. டி சொய்சா முன்மொழிய திரு ஜி. பி. மிடில்டன் வழிமொழிய 1967 செப்டெம்பர் 20ம் திகதியன்று நடைபெற்ற நிர்வாகச் செயற்குழுக் கூட்டத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

5. 1967 ஏப்பிரல் 21, 1967 யூன் 19, 1967 செப்டெம்பர் 27 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கட்டடக் குழுக் கூட்டத்தின் அறிக்கை.

(i) 1967 ஏப்பிரல் 21ம் திகதியன்று நடைபெற்ற கூட்டம்.

திரு வருசவிதாரன முன்மொழிய திரு ஹெற்றியாராச்சி வழி மொழிய 1967 ஏப்பிரல் 21ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

(அ) ஊவா விஞ்ஞான உத்தியோகத்தரின் வங்களா

கட்டடச் செயற்குழு சிபாரிசு செய்த விஸ்தரிப்புகள் அங்கீகரிக்கப் பட்டன.

(ஆ) தே.ஆ.நி. விளையாட்டுக்கூட படமாடம்

திரு டபிள்யு. எம். அப்புஹாமி ஆகியவரின் ரூ 12,943.95 தொகை யைக் கொண்ட கேள்வி அங்கீகரிக்கப்பட்டது.

(ii) 1967 யூன் 19ம் திகதியன்று நடைபெற்ற கூட்டம்
விளையாட்டுக் கூட படமாடம்

கட்டடங்கள் கட்டப்படும்பொழுது அவற்றிற்கு சேதம் ஏற்பட் டால் சிறு கட்டட ஒப்பந்தக்காரர்கள் காப்புறுதி ஒப்பந்தங்கள்மூலம் நட்ட ஈடு செய்யவேண்டுமென திரு தி. சி. ஏ. டி சொய்சா கூறினர். குறை நிரப்பும் வாக்குப்பணங்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெறமுன் நிர்வாகக் குழுவினுல் விவாதிக்கப்பட வேண்டுமென திரு லோஸ் வேண் டினர். யூன் 19ம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை திரு ஜே. எல். டி. பீரிஸ் முன்மொழிய திரு வருசவிதாரன வழிமொழிய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(iii) 1967 செப்டெம்பர் 27ம் திகதியன்று நடைபெற்ற கூட்டம்.

(அ) சென்ற் ஜோக்கிம் நீர்த்திட்டமும் மலகூட்ங்களும்.

நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாமையினுல் மலகூடங்களை அமைக்கும் முயற்சிகளும் நீர்த்திட்ட சீர்திருத்தங்களும் பின்போடப் பட்டுள்ளன.

(ஆ) அக்கிரத்தன்னை உபநிலையம்
உப உத்தியோகத்தர் விடுதிகள்

உப உத்தியோகத்தர் விடுதிகளை கட்டுவதில்லையெனத் தீர்மானிக் கப்பட்டது.

கனிட்ட உத்தியோகத்தர் வங்களாக்கள்

இவ்வங்களாக்களை கட்டிமுடிப்பதற்கென அக்டோபர் 10ம் திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது.

நிர்வாகக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட விடயங்களுக்கமைய 1967 செப்டெம்பர், 27ம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை திரு எஸ். பத்மநாதன் முன்மொழிய திரு தி. சி. ஏ. டி சொய்சா வழிமொழிய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. 1967 மார்ச் 31ம் திகதியன்று நடைபெற்ற பரிசோதனை தோட்டக் குழுக் கூட்டத்தின் அறிக்கை.

தலைவருக்குப் பதிலளிக்கையில் கீழ்ப்பிரதேச நிலையத்தின் தொழின் முறையியல் பிரிவில் உத்தியோகத்தரின் எண்ணிக்கை குறைவாக உள்ளதென அதிபர் கூறினார். இப்பிரிவிற்கு அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட கலாநிதி சிவப்பிரகாசபிள்ளை ராஜினாமாச் செய்துள்ளார். பிரித்தானியாவிலிருந்து எந்திரவியலறிஞன் பட்டம் பெற்றுத் திரும்பிய திரு ஜோசப் சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம் ஆகிய இரு இடங்களிலும் கடமையாற்றுவார். கனேடாவிற்கு கொழும்புத் திட்ட உபகாரச் சம்பளப் படிப்பில் சென்ற திரு சல்டினுக்குப் பதிலாக ஓர் பயிற்சிபெற்ற நுண்தொழில் உதவியாளர் இரத்தினபுரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திரு பின்சருக்குப் பதிலளிக்கையில் பாய்பொருட் படை உலர்த்தி இலங்கையை அடுத்த வருட தொடக்கத்தில் கப்பல்மூலம் வந்தடையுமென அதிபர் கூறினார். திரு எஸ். பி. வைத்திலிங்கம் முன்மொழிய திரு டி. இ. ஹெற்றியாராச்சி வழிமொழிய 1967 மார்ச், 21ம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. உத்தியோகத்தர் விடயங்கள்

கொழும்புத் திட்ட உபகாரச்சம்பளப் படிப்பு

பின்வரும் ஆராய்ச்சி உதவியாளர்கள் கொழும்புத் திட்ட உபகாரச் சம்பளப் படிப்பில் 1968ம் ஆண்டில் செல்வார்களென அறிவிக்கப்பட்டது. திரு ஆர். கே. நத்தானியல், ஆராய்ச்சி உதவியாளர், ஆலோசனைப் பிரிவு—நியமிக்கப்பட்ட திகதி: 4.11.63.

திரு எஸ். சந்தனம், ஆராய்ச்சி உதவியாளர், கமத்தொழில் இரசாயனப் பிரிவு—நியமிக்கப்பட்ட திகதி: 1.11.63.

திரு என். எம். அப்துல் கபார், ஆராய்ச்சி உதவியாளர், தொழின் முறையியல் பிரிவு—நியமிக்கப்பட்ட திகதி: 16.4.67.

வெளிநாடு சென்று திரும்பும் உத்தியோகத்தர்கள் தாம் மேற்கொண்ட வேலையையொட்டிய சுருக்கவுரையொன்றை சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென திரு லோஸ் கூறினார். வெளிநாட்டுப் பயிற்சிக்கு உத்தியோகத்தர்களை அனுப்புவதற்குப் பதில் பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யலாமென திரு வருசவிதாரன ஆலோசனை கூறினார். நிலையத்தில் கடமையாற்றுவதற்கு பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனரென அதிபர் தெரிவித்தார். ஆயினும் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் ராஜினாமாச் செய்துள்ளார்.

8. வேறு விடங்கள்

(i) 1965ம் ஆண்டுக்கான சபையின் வருடாந்த அறிக்கை.

1965ம் ஆண்டுக்கான சபையின் வருடாந்த அறிக்கை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்ததன் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டது.

(ii) <u>சபையின் முத்திரை</u>

பின்வரும் ஆவணங்களில் சபையின் முத்திரை பதியப்பட்டுள்ள தென அறிவிக்கப்பட்டது:

1. நீர் விநியோகத் திட்டம், கொட்டாவ உபநிலையம்—வாக்கர் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டட், காலி, 19.6.67ல் பதியப்பட்டது.

2. சென்ற் கூம்சில் தே.ஆ.நி. விளையாட்டுக்கூட படமாடம் கட்டுதல்—திரு டபிள்யு. எம். அப்புஹாமி, தலவாக்கொல்லை, 19.6.67ல் பதியப்பட்டது.

3. திரு சி. பி. பொஸ்டர்–பாஹமின் வெளிநாட்டு விஞ்ஞானிகளின் மிகைவயதுத் திட்டம் சம்பந்தமான பத்திரம் 9.8.67ல் பதியப்பட்டது.

(iii) <u>தனிக் கட்டுரை நூல் இல. 6—இலங்கைத் தேயிலையை பாதிக்கும் சிற்றுயிர்கள், சிற்றுண்ணிகள் முதலியவையும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்—ஜே.இ. கிரனம்</u>

மேற்கண்ட தனிக்கட்டுரை நூலின் பிரதிகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிலையத்தின் வெளியீடுகளை இலவசமாகப் பெறுவோர் உட்பட யாவருக்கும் இந்நூலை தனிப்பிரதி ரூ 15/– ஆக விற்கப் படுமென சம்மதிக்கப்பட்டது; ஆயினும், நிற ஒளிப்படத்தின் செலவில் 50% செலவைக் கொடுத்துதவும் இலங்கை ஷெல் கம்பனி லிமிட்டட் ஆகியோர் இந்நூலை இவ்விலைக்கு விற்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்திலேயே விற்பனை நடைபெறுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தால் நிலையத்தின் செலவை மாத்திரம் பெறக்கூடியமுறையில் விலை குறைக்கப்படும்.

(iv) <u>அடுத்த கூட்டம்</u>

அடுத்த கூட்டம் 1967, டிசெம்பர், 4ம்திகதி திங்கட்கிழமையன்று காலை 9.00 மணிக்கு நடைபெறுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் காலை 11.45 மணிக்கு முடிவடைந்தது.

ஏ. சி. பெரேரா
செயலாளர்

## கொழும்பில் 1967 டிசெம்பர் 4ந் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலைய சபைக் கூட்ட அறிக்கையின் சுருக்கம்

### பங்குபற்றியவர்கள்

திருவாளர்கள் சி. பி. சண்முகம், தி. சி. ஏ. டி சொய்சா, பி. ஜே. சி. டறண்ட், ஏ. பி. பின்சர், டி. இ. எற்றியாராச்சி, எம். பி. ஹொரஸ் வால், ஜி. பி. மிடில்டன், தி. ஏ. மோய், ஜே. எல். டி. பீரிஸ், எம். இராஜேந்திரம், எஸ் பி. வைத்திலிங்கம், கலாநிதி இ. எம். செனறி (அதிபர், தே.ஆ.நி.), திரு ஏ. சி. பெரேரா (செயலாளர்).

### பின்வருவோரும் பங்குபற்றினுர்கள்

கலாநிதி எல். எச். பெர்ஞண்டோ (உதவி அதிபர், தே.ஆ.நி.), திரு எச். எஸ். குணவர்த்தன (கணக்காளர், தே.ஆ.நி.) ஆகியோரும் பங்குபற்றினுர்கள். திருவாளர்கள் ஜி. எஸ். முத்தெத்துவேகம, எல். ஏ. சீவரத்தினம் ஆகியோர் சென்ற் கூம்ஸ் தோடட்த்தினதும் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தினதும் வரவுசெலவுகளின் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

திருவாளர்கள் எப். அமரசூரியா, ஜி. டி. லோஸ், பி. வருசவிதாரன ஆகியோர் கூட்டத்தின் நடவடிக்கைகளில் பங்குபற்றவியலாமைக்கு வருத்தம் தெரிவித்திருந்தனர். இக் கூட்டத்திற்கு திரு எப். அமரசூரியா தலைமைதாங்கவியலாமையினுல் திரு ஜி. பி. மிடில்டன் முன்மொழிய, திரு ஏ. பி. பின்சர் வழிமொழிய திரு எஸ். பத்மநாதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### 1. 1967 அக்டோபர் 7ம் திகதியன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தின் அறிக்கை.

திரு டி. இ. எற்றியாராச்சி முன்மொழிய, திரு ஜி. பி. மிடில்டன் வழிமொழிய இக்கூட்டத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

### 2. அறிக்கை சம்பந்தமான விடயங்கள்.

#### (அ) தேயிலை ஆணைக்குழு

நிலையத்தின் நிதி நிலைமைபற்றிய துணைநிருபம் தேயிலை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. இந்நிருபத்தின் பிரதிகள் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

#### (ஆ) அக்கிரத்தன்னை உபநிலையம்

யூரி குரூப்பின் அக்கிரத்தன்னைப் பிரிவில் 50 ஏக்கரை மாத்திரம் கொள்வனவுசெய்வதென்னும் தீர்மானம் யூரி குரூப்பின் முகவர்களான ஜோர்ஜ் ஸ்டுவட் அன் கம்பனி லிமிட்டட் ஆகியோரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கொள்வனவிற்கான பணம் ஐந்து ஆண்டுத் தவணைகளில் செலுத்தப்படும். யூரி குரூப்பின் அதிபர்கள் இவ்விடயத்தை பரிசீலனை செய்துவருவதாக நிலையத்தின் அதிபர் அறிந்துள்ளார்.

1967ம் ஆண்டில் ஐந்து ஏக்கர் புதர்நிலத்தில் தேயிலைபயிரிடப்படுவதுடன் 1968ம் ஆண்டிலும் முதிர்ச்சியடைந்த தேயிலை பிடுங்கப்பட்டு மறுசீரமைப்பு முறைகள் கையாளப்படும் நிலத்தில் மேலும் ஐந்து ஏக்கரில் தேயிலை பயிரிடப்படவேண்டுமென திரு பின்சர் ஆலோசனை கூறினுர். தேயிலை உதவிப்பணத்திலிருந்து ஏறத்தாழ ரூ 68,000

கிடைக்கவிருப்பதால் இத்திட்டத்திற்கான செலவை இப்பணத்திலி ருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்பொழுது 50 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது; அதாவது, வெ ளிக்கள இலக்கங்கள் 13, 14ல் 38 ஏக்கரும் புதர்நிலத்தில் 12 ஏக்கரும். ஆயினும் பின்வரும் வெளிக்களங்களை நிலையம் தவணைமுறையில் கொள் வனவு செய்யவேண்டும்:

| | | |
|---|---|---|
| வெளிக்களங்கள் 12, 13, 14 | — | 102 ஏக்கர் (ஏறக்குறைய) |
| பலாமரக் காணி | — | 6 ஏக்கர் |
| பத்தனை | — | 160 ஏக்கர் |

இந்நிலங்களை அதிபர் பார்வையிட்டபின் ஜோர்ஜ் ஸ்டுவட் அன் கம்பனி லிமிட்டட் ஆகியோருடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும். இத்திட்டத்தைக் கைவிடாது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென திரு பின்சர் வலியுறுத்தினர்.

திரு வைத்திலிங்கம் முன்மொழிய, திரு ஹொரஸ்வால் வழிமொழிய 1968ம் ஆண்டில் மேலும் ஐந்து ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

(இ) பாய் பொருட் படை தேயிலை உலர்த்தி சம்பந்தமாக தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் செய்த ஒப்பந்தம்

இவ் ஒப்பந்தம் சம்பந்தமாக, நிர்வாகக் குழு, தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் குறிப்புரைகளை பரிசீலனை செய்தபின் இவ் ஒப்பந்தப் பத்திரத்தில் சபையின் முத்திரையைப் பதிவதற்கு இணங்கியுள்ளது. திருவாளர்கள் யூலியஸ் அன் கிறீசி ஆகியோரும் இவ் ஒப்பந்தம் தேயிலை ஆராய்ச்சிக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதென அறிவித்துள்ளனர்.

(ஈ) தனிக் கட்டுரை நூல் இல. 6 — ''இலங்கைத் தேயிலையை பாதிக்கும் சிற்றுயிர்கள், சிற்றுண்ணிகள் முதலியவையும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்''

அதிபர், திரு வைத்திலிங்கத்துக்குப் பதிலளிக்கையில் இலங்கை ஷெல் கம்பனி, லிமிட்டட் ஆகியோர் தே.ஆ.நி. தனிக்கட்டுரை நூல் இலக்கம் 6 ஐ தனிப்பிரதி ரூ 15/- விலையில் விற்பதற்கு சம்மதித்துள் ளனர் என்று கூறினர்.

3. சபையினதும் குழுக்களினதும் உறுப்புரிமை.

(i) சபை:

(அ) திரு டி. இ. எற்றியாராச்சி கௌரவ விவசாய, உணவு அமைச்சரினல் 1967 அக்டோபர் 29ம் திகதிமுதல் மேலும் மூன்று வருட காலத்திற்கு சிறுகாணிச்சொந்தக்காரரின் பிர திநிதியாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) திரு ஏ. ஜி. சாப்-பவுலிற்குப் பதிலாக திரு ஜி. ஐ. டி கிலன்வைல், தலைவர், இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம், 1967 நவம்பர் 1ம் திகதிமுதல் கடமையாற்றுகிறார்.

(இ) 1967 செப்டெம்பர் 13ம் திகதி தொடக்கம் ராஜினமாச் செய்த திரு டி. ஏ. நீலிற்குப் பதிலாக இலங்கை தோட்ட துரைமார்கள் சங்கம் திரு எம். பி. ஹொரஸ்வாலை நியமித்துள்

ளது. தலைவர் புதிய உறுப்பினர்களை வரவேற்று திருவாளர்கள் சாப்-பவுல், டி. ஏ. நீல் ஆகியோருக்கு அவர்களின் சேவையைப் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

(ii) <u>நிர்வாகக்குழு</u>

திரு டி. ஏ. நீலிற்குப் பதிலாக திரு எம். பி. ஹொஸ்வால் நியமிக்கப்பட்டார்.

4. <u>1967 நவம்பர் 13ம் திகதியன்று நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தின் அறிக்கை</u>

(அ) <u>1968ம் ஆண்டின் மதிப்பீடு</u>

பின்வரும் விடயங்கள் விவாதிக்கப்பட்டன:

(i) 1968ம் ஆண்டுக்கான திருத்திய செலவுகள் சம்பந்தமான அதிபரின் குறிப்பு
(ii) 1967ம் ஆண்டின் பணநிலைபரத்தைப் பற்றிய விபரம்
(iii) 1968ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானமும் செலவும்
(iv) 1968ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு.

ரூபாய் மதிப்பிறக்கத்தினல் மதிப்பீடுகளிலும் மாற்றமேற்படலாமென அறிவிக்கப்பட்டது. மதிப்பிறக்கத்தின் விளைவாக எந்தெந்த வாக்குப்பணங்களை அதிகரிக்க வேண்டுமென்பதை நிர்வாகக் குழு அதன் அடுத்த கூட்டத்தில் ஆராயவேண்டுமென வேண்டப்பட்டது.

1968ம் ஆண்டுக்கான மதிப்பீடுகளை நிர்வாகக் குழு நுணுக்கமாக பரிசீலனை செய்துள்ளதென தலைவர் கூறினர். 1967ம் ஆண்டில் நிதி நிலைபரத்தில் ஏற்பட்ட குறையை 1968ம் ஆண்டின் வருமானத்திலிருந்து நிரப்புவதற்கு அதிபர் மதிப்பீடுகளை மேலும் குறைக்க வேண்டுமென வேண்டப்பட்டார். இதன் விளைவாக அதிபர் வரைவு மதிப்பீடுகளை ரூ 208,079 ஆல் குறைத்துள்ளார். ரூ 620,595 ஆக இருந்த குறைவை ரூ 312,516 ஆகக் குறைத்ததின் விபரம் திருத்திய மதிப்பீட்டைப்பற்றிய குறிப்பில் அதிபர் தந்துள்ளார். 1969ம் ஆண்டின் இறுதிக்குள் இத்தொகையும் முற்ருகக் குறைக்கப்பட்டுவிடுமென தலைவர் கூறினர்.

கீழ்ப்பிரதேச நிலைய மதிப்பீடுகள் குறைக்கப்படவில்லையென திரு சண்முகம் கூறினர். அதிபர் மொத்த வருமானச் செலவை 5% ஆல் குறைத்துள்ளாரென கலாநிதி பெர்ஞண்டோ சுட்டிக்காட்டினர். தனிப்பட்ட வாக்குப்பணங்களை குறைக்கமுடியவில்லையென்றும் ஆயினும் 1968ம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த வருமானச் செலவை 10% ஆல் குறைப்பதென கலாநிதி பெர்ஞண்டோ உறுதியளித்தார்.

ஐக்கிய பிரித்தானியாவிலுள்ள விஞ்ஞான ஆலோசனைக் குழுவின் வாக்குப்பணம் குறைக்கப்பட்டு இதன் சேவைக்கு ரூ 5000/- செலவிடப்படுமென அதிபர் தெரிவித்தார். நிலையம் கலாநிதி டப்ஸ்சின் சேவைகளை மாத்திரமே தொடர்ந்து பெறும்.

நடப்பு வருடத்திற்கும் முந்திய வருடத்திற்குமிடையே வரவு, செலவுத்திட்டத்தில் அதிக வேறுபாடுகள் காணப்பட்டால் மதிப்பீட்டில் இவற்றிற்கான விளக்கங்கள் தரப்பட வேண்டுமென திரு வைத்திலிங்கம் கருத்துத் தெரிவித்தார். திரு வைத்திலிங்கத்திற்குப் பதிலளிக்கையில் 1968ம் ஆண்டுக்கான வருமானச் செலவின் விபரக்கூற்றில் காட்டப்பட்ட தோட்டங்களின் மூலதனச்செலவு தேறியதொகையைக் குறிக்கின்றது எனக் கணக்காளர் கூறினர்; அதாவது, இத்தொகை, தேயிலை உதவிப்பண வருமானம் போக மதிப்பிடப்பட்ட செலவாகும்.

திரு எற்றியாராச்சி முன்மொழிய, திரு டி சொய்சா வழிமொழிய 1967ம் ஆண்டின் பணநிலைமை, 1968ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானச் செலவின் விபரக்கூற்று, 1968ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் ஆகியன அங்கீகரிக்கப்பட்டன.

(ஆ) இடைக்காலப் படிகள்

15.9.67 எனத் திகதியிடப்பட்ட 279ம் இலக்கம், 2.12.67 எனத் திகதியிடப்பட்ட 734ம் இலக்கம் ஆகிய திறைசேரி சுற்றுநிருபங்களின் பிரகாரம் இடைக்காலப் படிகள் வழங்குவதற்கு சபை அதிகாரமளித்தது. திரு டி சொய்சா முன்மொழிய திரு வைத்திலிங்கம் வழிமொழிய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. 1967 அக்டோபர் 24ம் திகதியன்று நடைபெற்ற பரிசோதனை, தோட்டக்குழுவின் அறிக்கை

(அ) 1968ம் ஆண்டுக்கான சென்ற் கூம்ஸ் தோட்ட மதிப்பீடுகள்

இம்மதிப்பீடுகள், தோட்ட மதிப்பீடு உபகுழுவினாலும் பரிசோதனை, தோட்டக்குழுவினாலும் விபரமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளதென தலைவர் அறிவித்தார். சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் மூலதனச் செலவிலிருந்து தேயிலை உதவிப்பண வருமானம் கழிக்கப்படவில்லையென்றும் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் மதிப்பீட்டில் மொத்த மூலதனச் செலவிலிருந்து உதவிப்பணவருமானம் கழிக்கப்பட்டுள்ளதென்றும் திரு வைத்திலிங்கம் கூறினார். திரு வைத்திலிங்கத்திற்குப் பதிலளிக்கையில், உள்ளபடியான மூலதனச் செலவு மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ளதெனவும் பெறப்பட விருக்கும் உதவிப்பணங்களின் விபரங்கள் 9ம் பக்கத்திலுள்ள குறிப்புகளில் தரப்பட்டுள்ளனவென்றும் கமத்தொழிலறிஞன் குறிப்பிட்டார். 1968ம் ஆண்டுக்கான சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் மதிப்பிடப்பட்ட இலாபத்திலிருந்து உதவிப்பண வருமானம் கழிக்கப்பட்டிருக்கின்றது.

(ஆ) 1968ம் ஆண்டுக்கான சென்ற் ஜோக்கிம் தோட்ட மதிப்பீடுகள்

இம்மதிப்பீடுகளும் மதிப்பீட்டு உபகுழுவினாலும் பரிசோதனை, தோட்டக்குழுவினாலும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இரு குழுக்களிலும் உறுப்பினராகக் கடமையாற்றும் திரு டறண்ட் பரிசோதனை, தோட்டக் குழு இம்மதிப்பீடுகளை பரிசீலனை செய்யமுன்னும் அதற்குப் பின்னும் தாமாகவே இவற்றை பரிசீலனை செய்துள்ளார். திரு டறண்டின் இந்த உதவிக்கு தலைவர், சபையின் சார்பில் நன்றி தெரிவித்தார். சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் தேயிலை உற்பத்திமுறை சி.ரி.சி. முறைக்கு மாத்தியதிலிருந்து அத்தோட்டத்தின் தேயிலை விலை ஏறக்குறைய 40 சதத்தால் அதிகரித்திருப்பதால் வருங்காலத்தில் இத் தோட்டத்தில் நட்டமேற்படாமலிருக்குமென தலைவர் நம்பிக்கை தெரிவித்தார். சிறந்த அரும்புகளை தேர்ந்து பறிக்கும் முறை கையாளப்பட்டதிலிருந்து சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் கொழுந்தெடுத்தலின் செலவு இறுத்தலுக்கு 11 சதத்தினால் அதிகரித்துள்ளதென கலாநிதி பெர்ணண்டோ கூறினார். இதன் விளைவாக பறிக்கப்படும் கொழுந்தினளவு 10% ஆல் குறைந்துள்ளது. அசாமில் ஏறத்தாழ சகல தோட்டங்களும் தேயிலை உற்பத்தியை சி.ரி.சி. முறைக்கு மாற்றியுள்ளார்கள். சி.ரி.சி. முறையினால் உற்பத்தியாக்கப்படும் தேயிலைகள் அசாமில் அதிக விலைகளைப் பெறுகின்றனவெனவும் கலாநிதி பெர்ணண்டோ கூறினார்.

திரு சண்முகத்திற்குப் பதிலளிக்கையில், சிறந்த அரும்புகளை தேர்ந்தெடுப்பதாலும் 42 ஏக்கர் தேயிலையை பிடுங்கினதாலுமே கொழுந்தெடுத்தலின் செலவு அதிகரித்துள்ளதென தோட்டத்துரை அறிவித்தார். திரு பின்சர் முன்மொழிய, திரு மிடில்டன் வழிமொழிய இரு

தோட்டங்களினதும் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டன. ரூபாய் பெறு மதியிறக்கத்தைத் தொடர்ந்து விலைவாசிகள், கூலிகள் முதலியவற்றில் ஏற்படும் அதிகரிப்புகளைக்கொண்ட துணை விபரக்கூற்றைத் தயாரித்து நிர்வாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு சென்ற் ஜோக்கிம் தோட்டத் துரையும் சென்ற் கூம்ஸ் கமத்தொழிலறிஞனும் வேண்டப்பட்டனர்.

திரு டறண்ட் முன்மொழிய திரு எற்றியாராச்சி வழிமொழிய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில், திரு எற்றியா ராச்சி கூட்டத்திலிருந்து விடைபெற்றுச் சென்றார்.

6. <u>உத்தியோகத்தர் விடயங்கள்</u>

(அ) <u>கலாநிதி யு. பெத்தியாகொட, தாவர உடற்றொழிலறிஞன்</u>

கலாநிதி பெத்தியாகொடவிற்கு நபீல்ட் பயிற்சிக் கொடைத்திட்டம் அளிக்கப்பட்டுள்ளதென அதிபர் தெரிவித்தார்; இத்திட்டத்தின் கீழ் ஒரு வருட காலத்திற்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக்காலத்தில் இலங்கைத் தேயிலை சம்பந்தமான உடற்றொழிலியல் பிரச்சினைகள் ஆராயப்படும். இவ்வாராய்ச்சிகளை றொதம்ஸ்டட் பரிசோதனை நிலையத்தின் தாவரவியல் பிரிவில் நடத்துவதற்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. கலாநிதி பெத்தியாகொட இத்திட்டத்தை ஏற்று 1968 மார்ச்/ஏப்பிரல் மாதமளவில் பிரித்தானியாவிற்குச் செல்லுவதற்கு அனுமதியளிக்கப் பட்டது.

(ஆ) <u>திரு ஏ. எச். பி. டயஸ், கணக்கீட்டு உதவியாளர்</u>

திரு ஏ. எச். பி. டயஸ், 31 வருடகால சேவைக்குப்பின் 1968, மார்ச் 31ம் திகதியன்று ஓய்வுபெறவிருக்கிறாரென அறிவிக்கப்பட்டது. அவர் நிலையத்திற்கு அளித்த சேவையைப் பாராட்டி சபை தனது நன்றியைத் தெரிவித்தது.

(இ) <u>இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்</u>

தே.ஆ.நி. கனிட்ட நிர்வாக, நுண்தொழில் உத்தியோகத்தர் சங்கம் கலைக்கப்பட்டு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் கிளையொன்று நிறுவப்பட்டுள்ளது.

<u>வேறு விடயங்கள்</u>

(அ) <u>ஐக்கிய அமெரிக்க விவசாய திணைக்களத்தின் வெளிநாட்டு விவசாய ஆராய்ச்சித் திட்டம் (FRTP – OD –1021)</u>

விவசாய ஆராய்ச்சி நிலையங்களுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் ஐக்கிய அமெரிக்க விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள் அண்மையில் நிலையத்திற்கு விஜயம் செய்துள்ளார்களென அதிபர் தெரிவித்தார். இதற்கான நிதி உதவியை இலங்கை ரூபாயில் வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். நெமற்றோடியல் திட்டத்தைப் போல் ஒரு திட்டத்தை வகுத்து தமக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டியுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவிருக்கும் ஆராய்ச்சிகளின் முடிவுகள் தமக்கும் பயனளிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமெனக் கேட்டுள்ளார்கள். பின்வரும் திட்டங்களுக்கு உதவி கோரப்படும்:

(1) சிறுதுளை துளைப்பி சம்பந்தமான ஆராய்ச்சி

(2) உடன் கரையும் தேயிலை, தேயிலையின் உயிரினவிரசாயனவியல் ஆகியவற்றின் ஆராய்ச்சி

இத்திட்டங்களுக்கு உதவியளிக்கப்பட்டால் சிற்றுயிரியல், உயிரின விரசாயனவியல் ஆகிய பிரிவுகளின் உத்தியோகத்தர் வேதனங்கள், இணைப்புகள் முதலியவற்றால் ஏற்படும் செலவுகளை குறைத்துக்கொள்ள இடமுண்டு. தான் அமெரிக்க அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை அறிவிக்குமாறு விவசாய, உணவு அமைச்சு கேட்டுள்ளதென அதிபர் அறிவித்தார். இவ்விடயத்தில் சபையின் முடிவை அறிவதற்கு தான் விரும்புவதாக அதிபர் மேலும் கூறினார். இத்திட்டங்களுக்கு உதவி ஐந்து வருட காலத்திற்கு அளிக்கப்படும். விவசாய, உணவு அமைச்சிற்கூடாக ஐக்கிய அமெரிக்க விவசாய திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இவ்விரு திட்டங்களைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

(ஆ) <u>சபையின் முத்திரை</u>

பின்வரும் ஆவணங்களில் சபையின் முத்திரை பதியப்பட்டுள்ளது: 1967, நவம்பர் 13ம் திகதியன்று பாய்பொருட் படை உலர்த்தி சம்பந்தமான தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கூட்டுத்தாபன ஒப்பந்தம்.

திரு மிடில்டன் முன்மொழிய, திரு மோய் வழிமொழிய அந்தானை காணி விற்பனவு ஒப்பந்தத்தில் சபையின் முத்திரையை பதிவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

(இ) <u>நியமனங்கள், ராஜினாமாக்கள், முதலியவை</u>

பின்வரும் விடயங்கள் அறிவிக்கப்பட்டன:

(i) <u>நியமனங்கள்</u>

கலாநிதி வி. பி. பவானந்தன், கமத்தொழில் இரசாயனவியலறிஞன், 2.11.67 தொடக்கம். மாதச் சம்பளம் ரூ 1,100

(ii) <u>ராஜினாமாக்கள்</u>

கலாநிதி பி. சிவப்பிரகாசபிள்ளை, ஆராய்ச்சி உத்தியோகத்தர், தொழின்முறையியல் பிரிவு, 19.10.67 தொடக்கம்.

(iii) <u>வெளிநாட்டுப் பயிற்சிபெற்றுத் திரும்பியோர்</u>

திரு டி. ஜானகிராம், நுண்தொழில் உதவியாளர், தாவர உடற்றொழிலியற் பிரிவு, 4.11.67ல் தமது எம்.எஸ்சி பட்டத்தைப் பெற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து திரும்பினார்.

(iv) <u>வெளிநாட்டு லீவிலிருந்து திரும்பியோர்</u>

திரு ஜே. ஏ. எச். றொல்லஸ்ட், பிரதி அதிபரும் கமத்தொழில் இரசாயனவியல், பயிராக்கவியல் ஆலோசகர் 1967 நவம்பர் 15ம் திகதியன்று இலங்கைக்குத் திரும்பினார்.

(v) வேலை நீக்கம்

திரு எம். ஆசீர்வாதம், ஆய்வுகூட பணிப்பாளர், உயிரின விரசாயனப் பிரிவு, 1967 யூலை 20ம் திகதி தொடக்கம்.

(iv) வெளிநாட்டு விஜயம்

கலாநிதி எல். எச். பெர்ணண்டோ, உதவி அதிபர் டொக்லாய் பரிசோதனை நிலையத்தின் 23வது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1967, நவம்பர் 5ம் திகதியன்று இந்தியா சென்று 1967, நவம்பர் 24ம் திகதியன்று திரும்பியுள்ளார்.

கூட்டத்தின் முடிவில் உறுப்பினர்களுக்கு தலைவர் தனது நத்தார் வாழ்த்துக்களையும் புது வருட வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

ஏ. சி. பொரரா
செயலாளர்

போட், ஞேட்ஸ், தோண்டன் அன் கம்பெனி
தத்துவம்பெற்ற கணக்காளர்.

த. பெ. இல. 186
கொழும்பு-(இலங்கை)
20, மார்ச், 1969.

அந்தரங்கமானதும் நம்பிக்கையானதும்

கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபர்,
கொழும்பு

ஐயா,

<u>இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 1967, டிசெம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டின் கணக்குகள்.</u>

மேற்கண்ட கணக்குகளை நாம் பரிசோதித்து முடித்ததன் பிரகாரம் பின்வரும் குறிப்புரைகளை இவ்வறிக்கையுடன் அணைக்கிறேம்:—

(1) 1967, டிசெம்பர் 31ந் திகதியன்றுள்ள ஐந்தொகைக் கணக்கு
(2) 1967, டிசெம்பர், 31ந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தோட்ட தொழிற்படு கணக்குகள்:—
  (அ) சென்ற் கூம்ஸ் தோட்டம்
  (ஆ) சென்ற் ஜோக்கிம் தோட்டம்
(3) 1967, டிசெம்பர், 31ந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரவுசெலவுக் கணக்கு
(4) 1967, டிசெம்பர், 31ல் உள்ள கடன் கொடுத்தோர்களினதும் ஒழுங்குகளினதும் சுருக்கம்
(5) 1967, டிசெம்பர், 31ல் கொள்விலை, திரண்ட மதிப்பிறக்கம், அன்றுள்ள பெறுமதி ஆகியவற்றைக் காட்டும் நிலையான இருப்புச் சொத்துக்களின் சுருக்கம்.
(6) 1967, டிசெம்பர், 31ல் உள்ள முதலீடுகளின் சுருக்கம்
(7) 1967, டிசெம்பர், 31ல் உள்ள கையிருப்புக்களின் சுருக்கம்
(8) 1967, டிசெம்பர், 31ல் உள்ள கடனுளிகளினதும் பற்று மீதிகளினதும் சுருக்கம்
(9) 1967, டிசெம்பர், 31ல் உள்ள கடனுளி உத்தியோகத்திரின் சுருக்கம்
(10) 1967, டிசெம்பர், 31ல் உள்ள வைப்புப் பணங்களின் விபரம்
(11) 1967, டிசெம்பர், 31ந் திகதியன்று கையிருப்புப் பணத்தினதும் வங்கி மீதிகளினதும் சுருக்கம்.

## I. <u>இவ்வாண்டின் பலன்கள்</u>

இவ்வாண்டில், நிலையான இருப்புச்சொத்துக்களின் மதிப்பிறக்கத்திற்கென ரூ 713,914.44 ஒதுக்கப்பட்டபின் ரூ 500,963.86 இலாபமாகத் தேறியது. இந்த இலாபம் பின்வருமாறு கிடைத்துள்ளது:—

| | | |
|---|---|---|
| நிலையம்—செலவுக்கு அதிகமான வருமானம் | ரூ | 471,431.44 |
| சென்ற் கூம்ஸ் தோட்டம்—நிருவாகத்தின் மேலதிகம் | ,, | 90,401.85 |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம்—நிருவாகத்தின் நட்டம் | ,, | 60,869.43 |
| | ரூ | 500,963.86 |

முந்திய வருடத்தில் நிலையான இருப்புச்சொத்துக்களின் மதிப்பிறக்கத்திற்கென ரூ 954,543.20 ஒதுக்கப்பட்டபின் ரூ 17,245.18 நட்டம் ஏற்பட்டது.

இக்கணக்குகளின் பரிசோதனையின் போது எம்மால் அவதானிக்கப்பட்டு இவ்வறிக்கையில் பின் தரப்பட்டுள்ள தவறுகளினுல் இலாபம் ரூ 43,000 தொகையினுல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

## II. சபையின் பிரமாணங்கள்

எமது பரிசோதனை முடிவடைந்த திகதிவரை நிலையப் பிரமாணங்களின் நகல் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இப்பிரமாணங்களை ஓர் விசேட உப-குழு ஆராய்ந்துவருகின்றதென அறிந்துள்ளோம்.

எமது பரிசோதனையின்போது ஓர் நடைமுறைக்கைந்நூல் தயாரிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டது. கணக்குகளை எவ்வாறு பராமரிக்கவேண்டும் என்னும் சபையின் முடிவை அறிவதற்கு இக்கைந்நூலை விரைவில் பூர்த்தியாக்குவது அவசியமெனக் குறிப்பிட விரும்புகிறோம்.

## III. 1967, டிசெம்பர், 31ந் திகதியன்றுள்ள ஐந்தொகைக் கணக்கு

இவ்வறிக்கையுடன் அணைக்கப்பட்டுள்ள ஐந்தொகைக் கணக்கில் காணப்படும் விடயங்களை விரிவான முறையில் சரிபார்த்ததன் விளைவாக கீழ்வரும் பேரேட்டுக் கணக்குகள் சம்பந்தமாக பின்வரும் குறிப்புரைகளைத் தருகின்றோம்:—

(1) திரண்ட நிதி—

இக்கணக்கு இவ்வாண்டில் பின்வருமாறு செயலாற்றப்பட்டது:—

| | | |
|---|---|---|
| 1966, டிசெம்பர், 31ல் உள்ள மீதி | ரூ | 13,953,965.52 |
| கூட்டுக: முந்திய வருடத்திற்கான சீராக்கல் | ,, | 55,448.71 |
| | ரூ | 14,009,414.23 |
| கூட்டுக: செலவுக்கு அதிகமான வருமானம் | ,, | 500,963.86 |
| | ரூ | 14,510,378.09 |

முந்திய வருடத்திற்கான சீராக்கல் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது:—

வரவு

| | | |
|---|---|---|
| புதிய வீதங்களினதும் மறுமதிப்பீட்டினதும் அடிப்படையில் மதிப்பிறக்கத்தை திரும்பவும் கணித்ததால் ஏற்பட்ட சீராக்கல் | ரூ | 93,858.89 |
| பெறுமதியிறக்கத்தினுல் நாணயமாற்றத்தில் ஏற்பட்ட வித்தியாசம் | ,, | 6,744.11 |
| பரிசீலனைக்குரிய வருடத்தில் மோட்டார் உதிரிப் பொருட்களின் பெறுமானத்தில் 50% கையிருப்புக்களுடன் சேர்த்ததன் விளைவு | ,, | 6,614.81 |
| கையிருப்புக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் உருப்படிக் கையிருப்பு பெறுமானத்திற்குமிடையேயுள்ள வித்தியாசம் | ,, | 1,129.55 |
| பலவின சீராக்கல்கள் | ,, | 2,009.60 |
| | ரூ | 110,356.96 |

## பற்று

| | | | | |
|---|---|---|---|---|
| 1966ம் வருடத்திற்கான தோட்ட உத்தியோகத்திதரின் மிகையூதியம்— | | | | |
| சென்ற் கூம்ஸ் தோட்டம் | ரூ | 5,385.17 | | |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம் | ,, | 3,098.00 | | |
| | ரூ | 8,483.17 | | |
| சென்ற் ஜோக்கிம் தோட்டத்தின் மீள முடியாத தவறணைச் செலவு—பதிவழிக்கப்பட்டுள்ளது | ,, | 4,979.52 | | |
| சென்ற் ஜோக்கிம் தோட்டம்—கணக்குப் பரிசோதனைக் கட்டணம் | ,, | 1,823.35 | | |
| 1966ல் மூலதனக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்ட வருமானக் கணக்குகளை இடமாற்றம் செய்ததன்விளைவு | ,, | 25,356.34 | | |
| கையிருப்பிலுள்ள இரு ஆடுதண்டுகள் முதலியனவற்றை விற்றதால் ஏற்பட்ட நட்டம் | ,, | 6,256.10 | | |
| பலவின சீராக்கல்கள் | ,, | 8,009.77 | ,, | 54,908.25 |
| | | | ரூ | 55,448.71 |

பெறுமதியிறக்கத்திஞல் நாணயமாற்றத்தில் ஏற்பட்ட வித்தியாசமாகிய ரூ 6,744.11மும் கையிருப்பிலுள்ள சில பொருட்களை விற்றதால் ஏற்பட்ட நட்டமாகிய ரூ 6,256.10மும் பலவின பற்றுச்சீட்டுக் கணக்குமூலம் சீராக்கப்பட்டிருக்க வேண்டும்.

தோட்டக்கணக்கில் செலவிற்குப் போதியளவு ஒழுங்குசெய்யாததன் விளைவாக 1966ம் வருடத்தில் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் ஏற்பட்ட நட்டம், ரூ 9,900/– ஆல் குறைத்தும், அதே வருடத்தில் சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் இலாபம், ரூ 5,385/– ஆல் மேலதிகமாகவும் காட்டப்பட்டுள்ளது. இவ்வாருன தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு ஒவ்வொரு வருடமும் நிலையத்தின் கணக்குகளைப் பூர்த்தியாக்க முன் அவற்றில் போதியளவு ஒழுங்குகளைக் கையாளவேண்டுமெனக் கூறவிரும்புகிருேம்.

### (2) கடன் கொடுத்தோர்

சில்லறைக் கடன்கொடுத்தோரின் மீதிகள் சம்பந்தமாக பின்வரும் குறிப்புரைகளைத் தர விரும்புகிருேம்:—

### (அ) பிரசுரங்களுக்கு முற்பணமாகப் பெறப்பட்ட கட்டணங்கள்

லேக் ஹவுஸ் நிறுவனம் லிமிட்டட் ஆகியோரிடமிருந்து நிலையப் பிரசுரங்களின் விற்பனையிஞல் பெறப்பட்ட ரூ 456/– தொகை முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையை வரவு செலவுக்கணக்கில் வரவு வைத்திருக்க வேண்டும். இத்தவறின் விளைவாக இலாபம் ரூ 456/– ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

கட்டணங்களை விரிவாகப் பரிசோதனை செய்தவிடத்து 1968, 1969, 1970 ஆகிய வருடங்களுக்கான கட்டணத்தொகையாகிய ரூ 377.47 தவறுதலாக வரவு செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதை அவதானித்தோம். இத்தொகையைப் பிரித்து அந்தந்த வருடத்தின் வரவுசெலவுக் கணக்கில் வரவு வைப்பதே தகுந்த முறையாகும்.

(ஆ) சில்லறை விநியோகத்தர்கள்

போதியளவு நிதியில்லாததன் காரணத்தினுல் பின்வரும் தொகைகள் 1967, டிசெம்பர், 31ம் திகதிக்கு முன்னர் தீர்த்துவைக்கப்படவில்லை:—

| | | குறிப்புரை |
|---|---|---|
| தேயிலை கட்டுப்பாட்டதிகாரி ரூ | 175,000 | 18.10.68ல் தீர்க்கப்பட்டது. |
| அரசாங்கக் கடன்— 3வது தவணைக் கட்டணம் | 166,667 | பரிசோதனை செய்த திகதியன்று நிலுவையாகவுள்ளது—28.11.68. |
| ரூ | 341,667 | |

பெரும்பாலான விநியோகத்தர்களிடமிருந்து அவர்களின் மீதிகளை உறுதிப்படுத்திய சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. மூன்று விநியோகத்தர்கள் தமது மீதிகள் சரிவரக் காட்டப்படவில்லையெனக் கூறியுள்ளார்கள். இவ்வாறு உறுதிப்படுத்தப்படாத மீதிகளின் தொகை ரூ 2,894.58 ஆகும்.

(இ) தோட்டக் கடன்கொடுத்தோர்

சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் இரத்தினம் எடுப்பதற்கு உரிமை வழங்கப்பட்டதால் ரூ 27,711/- பெறப்பட்டுள்ளது. இத்தொகையை வரவு செலவுக்கணக்கில் அல்லது நேரடியாக திரண்ட நிதிக் கணக்கில் வரவு வைத்திருக்க வேண்டும். இத் தவறினுல் சில்லறைக் கடன் கொடுத்தோர்களின் கணக்கு மேலதிகமாகவும் வருமானம் ரூ 27,711/- ஆல் குறைத்தும் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) பிடி காசு

எமது பரிசோதனை முடிவடைந்த திகதிவரை எம். வை. ஹேமச்சந்திரா அன் கம்பனி ஆகியோருக்கு ரூ 13,416.09 தொகையைக் கொண்ட பிடிகாசு ஓர் தகராற்றின் காரணமாகத் தீர்த்துவைக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட திகதியில் பூர்த்தியாக்காததன் காரணமாக ரூ 1,150/- வைக்கொண்ட தொகையை, பொருந்திய நட்டமாகக் கழிப்பது, என்னும் நிபந்தனைக்கு இணங்க பிடிகாசை வழங்குமாறு கட்டடக்கலைஞர் சிபாரிசு செய்துள்ளார். இவ்விடயமாக கட்டடக் குழு ஓர் இறுதியான முடிவை இதுவரை எடுக்கவில்லை.

(3) அரசாங்கக் கடன்

ஐந்தொகைக் கணக்கு முடி வடைந்த திகதியன்று இலங்கை அரசாங்கத்திற்கு நிலுவையாகவுள்ள கடனின் மீதியை உறுதிப்படுத்திய சான்றிதழை திறைசேரியிலிருந்து பெற்றுள்ளோம்.

(4) நிலையான இருப்புச்சொத்துக்கள்

(அ) சரிபார்த்தல்

இருப்புச் சொத்துக்கள், பரிசோதனை செய்த திகதியன்று ரூ 2,852,088.46 பெறுமதியாக மதிக்கப்பட்டுள்ளன; இவ்விருப்புச் சொத்துக்களின் உடைமை நிலையத்தின் இரு தோட்டங்களின் உரித்துறுதிகளைக்கொண்டும் மோட்டார் வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களைக்கொண்டும் சரிபார்கப்பட்டுள்ளன. 1967, டிசெம்பர், 31ம் திகதியன்று நிலையத்தின் உடைமையிலிருந்த பெரும்பாலான ஏனைய இருப்புச் சொத்துக்கள் 1968ம் வருடத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதியால் சரிபார்க்கப்பட்டுள்ளது.

## (ஆ) நிலையான இருப்புச்சொத்துக்களின் சேர்க்கைகள்

எமது முந்திய வருடத்தின் கணக்குப் பரிசோதனை அறிக்கையில் நிலையான இருப்புச்சொத்துச் சேர்க்கைக் கணக்கில் வருமானத்தில் வரவு வைக்கவேண்டிய கணக்குகளும் செலவுக் கணக்கில் வரவுவைக்க வேண்டிய 1966, டிசெம்பர், 31ம் திகதியன்று முடிவடையாத வேலை களின் கணக்குகளும் சேர்ந்துள்ளன என்று குறிப்பிட்டிருந்தோம். 1966ம் வருடத்தில் ரூ 25,356.34 தொகைகொண்ட வருமானக் கணக்கு நிலையான இருப்புச் சொத்துக்கணக்கில் வரவுவைக்கப்பட்டுள் ளது; 1966ல் ரூ 439,528.17 தொகைகொண்ட அபிவிருத்தியிலுள்ள வேலைக்கணக்கு நிலையான இருப்புச்சொத்துக் கணக்கில் வரவுவைக்கப் பட்டுள்ளது.

பரிசீலனைக்குரிய இவ்வருடத்திலும் ரூ 16,000/- தொகையைக் கொண்ட வருமானச் செலவுக்கணக்கு மூலதனக் கணக்கில் வரவுவைக் கப்பட்டதைக் கவனித்துள்ளோம். உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதி நிலையான இருப்புச்சொத்துக்களை சரிபார்த்து முடித்ததும் இக் கணக்கு சீராக்கப்படுமென அறிந்துள்ளோம்.

## (இ) காணிக் கொள்வனவு

அக்கிரத்தன்னைப் பிரிவு இதுவரை முற்றுகக் கொள்வனவு செய்யப் படவில்லை. அதன் சீரமைப்பிற்கெனப் பெறப்பட்ட உதவிப்பணமாகிய ரூ 40,000/- தொகை இதுவரை நிலையத்திற்கு மாற்றப்படாது அத் தோட்டத்தின் உடைமையாளரிடமே இருக்கின்றது. உதவிப் பணங் கள் உடைமையாளருக்கே வழங்கப்படுவதால், இக்காணி முற்றுகக் கொள்வனவுசெய்யப்பட்டதும் இப்பணம் நிலையத்திற்கு மாற்றப்படு மென அறிந்தோம்.

நிலையம், அந்தானை தோட்டத்தில் ஒரு பகுதியை 1968, ஆகஸ்ட் மாதத்தில் ரூ 296,000/- தொகைக்கு கொள்வனவுசெய்துள்ளது.

1967, யூலை, 31ம் திகதியன்று கஹதகஹெனை என்னும் இடத்தி லுள்ள காணியை நிலையம் எடுத்ததற்கு கணக்குகளில் ஒருவித ஒழுங்கு களும் செய்யப்படவில்லை. இக்காணி ரூ 59,285/- பெறுமதியாக மதிக் கப்பட்டுள்ளது.

## (ஈ) குத்தகைச் சொத்து

பசறையிலுள்ள காணி குத்தகையில் எடுக்கப்பட்டுள்ளது. 1995ம் வருடத்தில் குத்தகை முடிவடைந்ததும் அக்காணியிலுள்ள கட்டடங்களுக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது எனக் குத் தகை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. 1967, டிசெம்பர், 31ம் திகதி யன்று பசறையிலுள்ள கட்டடங்கள் ரூ 156,719/- பெறுமதியாக மதிக்கப்பட்டுள்ளன. கொள்விலை படிப்படியாகக் குறைந்து ஒப்பந்தம் முடி வடையும் காலத்தில் முற்றுக அற்றுப்போகும் வகையில் மதிப்பிறக் கத்தை கணிக்க வேண்டுமெனக் கூறவிரும்புகிறோம்.

## (5) முதலீடுகள்

ரூ 517,112.50 பெறுமதியான இலங்கை அரசாங்கப்பிணைகளின் பத்திரங்களைப் பரிசீலனைசெய்துள்ளோம். ஐக்கிய பிரித்தானியாவி லுள்ள நஷனல் அன் கிறின்லே வங்கி லிமிட்டட் ஆகியோர் பவுண் முதலீட்டுப் பத்திரங்கள் தமது பாதுகாவலில் இருக்கின்றனவென உறு திப்படுத்தியுள்ளனர். இப்பிணைகள் ரூ 62,362.80 பெறுமதியானவை. 1967, டிசெம்பர், 31ம் திகதியன்று முதலீடுகள் யாவற்றினதும் சந் தைப்பெறுமதி ரூ 545,000/- ஆக மதிக்கப்பட்டுள்ளது. ஐந்தொ கைக் கணக்கில் காட்டப்பட்ட கொள்விலை சந்தைப்பெறுமதியிலும் பார்க்க ரூ 34,000/- ஆல் அதிகமாகக் காணப்படுகிறது.

(6) கையிருப்புக்கள்

நிலையத்திலுள்ள கையிருப்புக்களின் சுருக்கமொன்று இவ்வறிக்கையுடன் அணைக்கப்பட்டுள்ளது.

(அ) கையிருப்புக்களை கணிக்கும்முறை

கையிருப்புக்களை கணிக்கும்முறை சம்பந்தமாக எம்மால் காட்டப்பட்ட தவறுகள் பரிசீலனைக்குரிய இவ்வருடத்தில் திருத்தப்பட்டுள்ளது.

ரூ 14,155.56 பெறுமதியான 14 குத்துக்கால்கள் 1967, டிசெம்பர், 31ம் திகதியன்று உருப்படி சரிபார்க்கப்படாதிருந்தது. இவை கீழப் பிரதேச நிலையத்தில் இருப்பதாக அறிந்தோம்; ஆயினும், இதுவரை ஓர் பொறுப்பான உத்தியோகத்தர் இதை *உறுதிப்படுத்தவில்லை.

(ஆ) காரியாலய கையிருப்பு அட்டைகள்

பரிசீலனைக்குரிய இவ்வருடத்தில் 1966, டிசெம்பர், 31ம் திகதி உருப்படி சரிபார்க்கப்பட்ட தொகைகளுக்கமைய காரியாலய கையிருப்பு அட்டைகள் சீராக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள வித்தியாசங்களுக்கு ஒருவித விளக்கமும் தரப்படவில்லை; பொருட்களின் கொடுக்கல் வாங்கல்களை தவறான முறையில் பதிவுசெய்த காரணத்தினாலேயே இவ் வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன.

1967, டிசெம்பர், 31ம் திகதியன்று உருப்படி சரிபார்க்கப்பட்ட தொகைகள் காரியாலய கையிருப்பு அட்டைகளின் மீதியுடன் ஒப்பிடப்பட்டன. மேலதிகங்கள் ரூ 638.36 தொகையாகவும் (ரூ 50/–க்கும் மேலான பெறுமதியுள்ள பொருட்கள் மாத்திரம்) குறைபாடுகள் ரூ 1,139.20 தொகையாகவும் (ரூ 50/–க்கும் மேலான பெறுமதியுள்ள பொருட்கள் மாத்திரம்) கணிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமை திருப்திகரமானதெனக் கருதலாம்.

(இ) பாவிக்கப்படாத கையிருப்புக்கள்

நிலையத்தின் பாவிலையில் இல்லாத சில கையிருப்புக்களை அவதானித்துள்ளோம்; இவை ரூ 800/– பெறுமதியுள்ளதாக மதிக்கப்பட்டுள்ளன. நிலையத்தின் பாவிலையில் இல்லாத புதிய டயர்கள், புதிய டியுப்புக்கள், பழைய டயர்கள், சீரமைக்கப்பட்ட டயர்கள், உதிரிப் பொருட்கள் முதலிய பொருட்களைக்கொண்ட பட்டியலொன்று விசேட ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் 1968, செப்டெம்பர், 18ம் திகதியன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் விற்பனைசெய்யப்படுமென அறிந்துள்ளோம்.

(ஈ) தவிர்க்கப்பட்ட பொருட்கள்

1967, டிசெம்பர், 31ம் திகதியன்றுள்ள ஐந்தொகைக் கணக்கில் பின்வரும் பெறுமதியுள்ள கையிருப்புக்கள் சேர்க்கப்படவில்லை:—

| | | |
|---|---|---|
| ஒற்றையச்சுப் பம்பி உதிரிப்பொருட்கள் (மூலதனக் கணக்கில் வரவுவைக்கப்பட்டுள்ளது) | ரூ | 3,767 |
| அலுமினியம் கம்பி ... ... ... | ,, | 1,000 |
| சீனுக்காரம் ... ... ... | ,, | 3,000 |
| சோடாச் சாம்பல் ... ... ... | ,, | 1,400 |
| | ரூ | 9,167 |

*உறுதிப்படுத்திய பத்திரம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட தொகைகள் கணக்கில் சேர்க்கப்படாத காரணத்தினுல் இலாபம் ரூ 5,400/- தொகையினுல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

வெவ்வேறு பிரிவுகளிலுள்ள பாவிக்கப்படும் கையிருப்புக்கள் செலவுக் கணக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் மீதியாகவுள்ள கையிருப்புக்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனக் கூற விரும்புகிறோம். அதிக பெறுமதிவாய்ந்த கையிருப்புக்களின் பெறுமதியை அவற்றிற்குரிய கணக்குகளில் வரவு வைக்கவேண்டும்.

மீளத்தவாளித்த டயர்களையும் மதித்து அவற்றையும் கையிருப்புக்களுடன் சேர்க்கவேண்டும்.

(7) கடனுளிகளும் வேறுபற்றுமீதிகளும்

கடனுளிகளினதும் வேறுபற்றுமீதிகளினதும் பட்டியலொன்று இவ் வறிக்கையுடன் அணைக்கப்பட்டுள்ளது. இவ்விடயமாக எமது குறிப்புரைகள் பின்வருமாறு:—

(அ) காப்புறுதிக் கோரிக்கை

ரூ 1,728.71 தொகைகொண்ட கோரிக்கைகள் நீண்டகாலமாக நிலுவையிலுள்ளன; இத்தொகைகளை அறவிடமுடியாத காரணத்தினுல் இவற்றை பதிவழிக்குமாறு கூறவிரும்புகிறோம்.

(ஆ) வேறு கடனுளிகள்

நிலுவையாகவுள்ள தொகையில் ஏறக்குறைய ரூ 650 – அறவிட முடியாததாகத் தெரிகிறது.

IV தோட்ட தொழிற்படு கணக்கு

(1) சென்ற் கூம்ஸ் தோட்டம்

தோட்ட நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களைக், கீழே தருகின்றோம்:—

| | 1967 | 1966 |
|---|---|---|
| உற்பத்தியான தேயிலை | 457,727 று | 431,697 று |
| | ரூ ச | ரூ ச |
| தேயிலை விற்பனை | 1,020,221.59 | 1,061,401.90 |
| ஒரு இறு. சராசரி விற்பனை விலை | 2.23 | 2.46 |
| முளைவகைத் தடிகளின் விற்பனை | 40,359.48 | 23,312.00 |
| தரகுக் கூலி, தூக்குச் செலவு, பெறுமான விகித வரி உட்பட ஒரு இறு. உற்பத்திச் செலவு | 2.12 | 2.07 |
| நிர்வாகத்தின் பலன் | 90,401.00 | 189,302.00 |

(2) சென்ற் ஜோக்கிம் தோட்டம்

| | | |
